# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

25

பிரித்தானியர்களிடமிருந்து ஆட்சியுரிமை தனது கைகளுக்கு வந்ததும் மலையக தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்தது மட்டுமல்லாமல், 'தமிழர்கள் எப்போதுமே சிங்கள பௌத்தர்களால் ஆளப்படும் இனம்' என்பதை சொல்லாமல் சொல்லும் விதத்தில் மற்றொரு விடயத்தை டி.எஸ். சேனநாயக்கா தால் சிங்கள பௌத்தர்களின் மரபு வழிக் கொடியான சிங்கக் கொடியே- இலங்கையின் தேசியக் கொடியாவதற்கான சட்டம் சுலபமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டப்படி சிவப்பு நிற பின்னணியில் வலதுகாலில் வாள் ஏந்திய சிங்கம் மஞ்சள் நிறத்தில் வரையப்பட்டிருக்க நான்கு மூலையிலும் அதே மஞ்சள் நிறத்தில் நான்கு அரச இலைகளும், சிறிய அளவில் காவிநிற அடையாளம் தமிழர்களை குறிக்கும் விதத்திலும், பச்சை நிற அடையாளம் இஸ்லாமியர்களைக் குறிக்கும் விதத்திலும் வரையப்பட்ட கொடியே இலங்



யாமற் போனது.

இது பற்றிப் புதிய பிரதமராக பதவியேற்ற டட்லி சேனநாயக்கா ஒரு வைபவத்தில் பேசும்போது 'இராமசாமிக்கும், மீனாட்சிக்கும் வாக்குரிமையைத் தடுக்கும் எளிமையான முறையைப் பயன்படுத்தி இலங் திற்கு ஆலோசனை கூறியிருந்தார்.

டட்லி சேனநாயக்கா அந்த ஆலோசனைகளை கவனத்திற்கு எடுக்காது விட்டதனால் 1953-ம் ஆண்டு நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி எற்பட்டது. அரிசி மானியம் ரத்துச் செய்யப்பட்டது. ஒரு கொத்து அரிசி 25 சதத்திலிருந்து 75 சதமாக உயர்ந்தது. பள்ளிப் பிள்ளைகளுக்கு மதிய உணவாகக் கொடுக்கப்பட்ட இலவச 'பணிஸ்' நிறுத்தப்பட்டது. தொடருந்து மற்றும் தபால் செலவுகளும் அதிகரிக்கப்பட்டன. நாட்டில் ஏனைய பொருட்களின் விலைவாசியும் இரு மடங்கு மும்மடங்காக அதிகரிக்க ஆரம்பித்தது.

1953-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ம் திகதி அரசாங்கத்தின் கண்மூடித்தனமான போக்கை எதிர்த்து பிரமாண்டமான கடையடைப்பு ஒன்றை எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்தன. குறிப்பாக இடது சாரிக் கட்சிகள் அனைத்தும் கடையடைப்புக்கு மும்மு

# தமிழர்கள் கொடி இழந்த வரலாறு

திட்டமிட்டுச் செய்தார்.

அதுதான் பௌத்த சிங்களவர்களது மரபு வழிக் கொடியான வாள் ஏந்திய சிங்கக் கொடியை இலங்கையின் தேசியக் கொடியாக்கியது. 1948—ம் ஆண்டு நடுப்பகுதியில் இதற்கான பிரேரணையை டி.எஸ் சேனநாயக்கா பாராளுமன்றத்தில் கொண்டு வந்தபோது, சில தமிழ் பிரதிநிதிகள் (தமிழ் தலைவர்கள் அல்ல) அதை எதிர்த்தனர். தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் அனைவருக்கும் பொதுவாக இருக்கும் சிவனொளி பாதமலை பொறித்த கொடியையே தேசியக் கொடியாக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

டி.எஸ்.சேனநாயக்கா அதை ஏற்றுக் கொள்ளவில்லை. 2500 வருட பாரம்பரியத்தைக் கொண்ட சிங்கக் கொடிதான் இலங்கையின் தேசியக் கொடியாக வரவேண்டும் என்பதில் அவர் பிடிவாதமாக நின்றார். இந்தியாவிலிருந்து வந்த விஜயனின் பாரம்பரியத்தைப் பேணும் வகையில் சிங்கக்கொடி தேசியக் கொடி ஆக வேண்டுமென்று சிங்களவர்கள் நினைத்தால் 3000

**பெரும்பாலான தமிழ் பிரதிநிதிகளும் தலைவர்களும் இந்தக் கொடி விடயத்தை ஒரு பாரதூரமான விடயமாகக் கருதி பெரிய அளவில் எதிர்ப்புத் தெரிவிக்காததால் சிங்கள பௌத்தர்களின் மரபு வழிக் கொடியான சிங்கக்கொடியே இலங்கையின் தேசியக் கொடியாவதற்கான சட்டம் சுலபமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.**

முதல் 4000 வருட பாரம்பரியம் கொண்ட புலிக்கொடியையும், நந்திக்கொடியையும் தேசியக் கொடியாக்க வேண்டுமென்று கோருவதற்கு தமிழர்களுக்கு உரிமையுண்டு என்று மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த தமிழ் பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றத்தில் வாதிட்டார்.

ஆயினும் பெரும்பாலான தமிழ் பிரதிநிதிகளும் தலைவர்களும் இந்தக் கொடி விடயத்தை ஒரு பாரதூரமான விடயமாகக் கருதி பெரிய அளவில் எதிர்ப்புத் தெரிவிக்காத

கையின் தேசியக் கொடியாக ஆனது.

தமிழர் தலைவர்கள், தங்களது எஜமானர்களான பிரித்தானியர்கள் கற்றுத் தந்த காலனிய ஜனநாயக, சரணாகதி தத்துவத்தின் பிரகாரம் இந்தத் தேசியக் கொடி சம்பந்தமான பாராளுமன்றத் தீர்மானத்தை பெரிய மனதோடு ஏற்றுக்கொண்டு நந்திக் கொடியும், புலிக்கொடியும் பறந்த இடங்களிலெல்லாம் அவற்றை இறக்கிவிட்டு சிங்கக் கொடியை வைபவ ரீதியாக ஏற்றி நமோ நமோ தாயே என்று பாடியும் மகிழ்ந்தனர்.

1952-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் திகதி டி.எஸ்சேனநாயக்கா —கொழும்பு காலிமுகத்திடலில் குதிரையில் இருந்து விழுந்து இறந்ததும், அவரின் இடத்திற்கு யார் வருவது என்பது தொடர்பாக பெரிய ஓட்டப் பந்தயம் ஒன்று நடந்தது. முறைப்படி S.W.R.D. பண்டாரநாயக்காவே பிரதமராக வந்திருக்க வேண்டும். ஏற்கனவே— அவர் ஐ.தே. கட்சியைவிட்டு வெளியேறிவிட்டதால் அந்த வாய்ப்பை அவர் இழந்துவிட்டார். அடுத்தபடியாக டி.எஸ் சேனநாயக்காவுக்கு மருமகன் முறையிலான சேர். ஜோன் கொத்தலாவலையே அதற்கு எல்லா விதத்திலும் பொருத்தமானவராக இருந்தார். ஆனால் டி.எஸ்சேனநாயக்காவோ தான் சடுதியாக மரணமடைய நேர்ந்தால், தனக்குப் பின் தன் மகன் டட்லி சேனநாயக்காவையே பிரதமராக்க வேண்டும் என்று அப்போது இலங்கையின் மகாதேசாதிபதியாக இருந்த சோல்பரி பிரபுவுடன் எழுதாத ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தார்.

டி.எஸ்.சேனநாயக்கா இறந்த போது, இங்கிலாந்தில் விடுமுறையில் இருந்த சோல்பரி பிரபு, இலங்கையில் இருந்து தனது பொறுப்புக்களை கவனித்துக் கொண்டிருந்த 'சேர்.அலன் றோஸ்' சிடம் தான் வரும்வரை தற்காலிகமாகவேனும், புதிய பிரதமர் யாரையும் நியமிக்க வேண்டாம் என அறிவித்துவிட்டு தனது விடுமுறையை இரத்துச் செய்துகொண்டு அவசர அவசரமாக கொழும்புக்குத் திரும்பினார்.

அடுத்த பிரதமர் தானே என்ற நம்பிக்கையுடன் நாட்டு மக்களுக்கு வானொலியில் உரையாற்றுவதற்கான பேச்சைத் தயாரிக்கும் வேலையில் சேர்.ஜோன் கொத்தலாவலை மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சோல்பரிப் பிரபு, டி.எஸ் சேனநாயக்காவிற்குப் பின் அவரது புதல்வர் டட்லி சேனநாயக்காவே அடுத்த தற்காலிக பிரதமராவார் என்று அறிவித்தார். ஜோன் கொத்தலாவலைக்கு இது பெரிய அதிர்ச்சியாக மட்டுமல்ல பெருத்த அவமானமாகவும் இருந்தது. எப்படியும்'தனக்கு குழிபறித்த சோல்பரி பிரபுவை பழிவாங்குவது' என்று அவர் கறுவிக்கொண்டிருந்தார்.

டட்லி சேனநாயக்கா, சோல்பரி பிரபுவின் தயவால் பிரதமராக ஆகி விட்டாலும் ஐ.தே. கட்சிக்குள் இருந்த போட்டிகளையும் எதிர்ப்புக்களையும் சமாளிக்கும் அளவுக்கு அவரிடம், அரசியல் விவேகம் இருக்கவில்லை.

அதனால் பதவியேற்ற குறுகிய காலத்திலேயே அவர் பாராளுமன்றத்தை கலைத்துவிட்டு புதிய தேர்தல் நடத்த வேண்டி ஏற்பட்டது.

1952 நடுப்பகுதியில் நடைபெற்ற இந்தத் தேர்தலில் டட்லி சேனநாயக்கா குறைந்தளவு பெரும்பான்மையுடன் வெற்றியீட்டினார். இந்தத் தேர்தலில் முக்கியமான சம்பவம் — மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பிரதிநிதித்துவத்தை இழந்ததாகும். இத் தேர்தலில் அவர்களது வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்ட பின்னர் நடந்ததால் அவர்களால் வாக்களிக்க முடி

கைவாழ் இந்தியர்களின் பிரச்சினையை ஐ.தே.கட்சி இலகுவாகத் தீர்த்துக்கட்டிவிட்டது என்று கூறினார். (காங்கிரஸ் நியூஸ் 12 மே 1952)

மலையகத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீவிரப் பிரச்சாரப் போர் ஒன்றை மேற்கொண்டது. இந்தப் பிரச்சாரங்களில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் அவலங்கள், இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அவர்கள் செய்த தியாகங் கள் எடுத்துக் கூறப்பட்டு, அவர்களுக்கு வாக்குரிமை கிடைக்க இலங்கையில் உள்ள சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கோரப்பட்டது. இந்தப் பிரச்சாரப் போராட்டத்தின் நூறாவது நாளன்று பிரதமர் அலுவலகத்திற்கு முன்னால் சத்தியாக்கிரக போராட்டம் ஒன்றும் கொழும்பு நகர மண்டபத்தில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

டி.எஸ் சேனநாயக்காவின் காலத்தில் தொடக்கி வைக்கப்பட்ட உணவு மானியத்தால் செலவாகி வந்த ஸ்டேர்லிங் பவுண்ஸ் நிலுவை—டட்லி சேனநாயக்காவின் காலத்தில் முற்றாக செலவாகி முடிந்துவிட்டது. அப்போது இலங்கை மத்திய வங்கியின் தலைவராக இருந்த அமெரிக்கரான ஜோன் எக்செட்டர் அடுத்தடுத்த ஆண்டுகளில் இலங்கையில் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி வரவிருப்பதாகவும் அதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கும் படியும் அரசாங்கத்

**தமிழர் தலைவர்கள், தங்களது எஜமானர்களான பிரித்தானியர்கள் கற்றுத் தந்த காலனிய ஜனநாயக, சரணாகதி தத்துவத்தின் பிரகாரம் இந்தத் தேசியக்கொடி சம்பந்தமான பாராளுமன்றத் தீர்மானத்தை பெரிய மனதோடு ஏற்றுக்கொண்டு நந்திக் கொடியும், புலிக்கொடியும் பறந்த இடங்களிலெல்லாம் அவற்றை இறக்கிவிட்டு சிங்கக்கொடியை வைபவ ரீதியாக ஏற்றி நமோ நமோ தாயே என்று பாடியும் மகிழ்ந்தனர்.**

ரமாக உழைத்தனர். பேருந்துகள், தொடருந்துகள் எதுவும் ஓடவில்லை. சகல அரசாங்க தனியார் நிறுவனங்களிலும் வேலைகள் நடக்கவில்லை. கடைகள் வர்த்தக நிறுவனங்கள் யாவும் மூடிக்கிடந்தன. மக்கள் அரசாங்கத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் இறங்கினார்கள். அரசாங்கம் அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்து படையினரைக்கொண்டு மக்களது எழுச்சிகளை அடக்க முற்பட்டது.

நண்பகல் 12 மணி வரையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 12 பொது மக்கள் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனால் நாட்டில் இன்னும் கொந்தளிப்பு ஏற்பட்டது. அரசாங்கம் பாராளுமன்றக் கட்டடத்தில் மந்திரிசபைக் கூட்டத்தை நடாத்தப் பயந்து கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கப்பல் ஒன்றில் இரகசியமாக அதை நடத்தியது. இறுதியில் பிரச்சினைக்கு முகங்கொடுக்க முடியாத டட்லி சேனநாயக்கா தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அவரது இடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சேர்ஜோன் கொத்தலாவலை —பிரதமராக பதவி ஏற்றதும் முன்பு அந்தப்பதவியை தனக்குத்தர மறுத்த சோல்பரி பிரபுவை பழிவாங்கும் விதத்தில் அவரை மகாதேசாதிபதி பதவியில் இருந்து அகற்றிவிட்டு சிங்களவரான ஒலிவர் குணதிலகாவை மகாதேசாதிபதியாக்கினார்.

- நக்கீரன்